இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 50 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 12 – சனிக்கிழமை 28 செப்டம்பர் 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 50 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 12 - Saturday 28 September 2024 - Madurai 16 Pages ₹ 5.00





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.9.2024) புதுடெல்லியில் உள்ள பிரதமர் அலுவலகத்தில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சந்தித்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்திட தேவையான ஒன்றிய அரசின் நிதி, சமக்ரசிக்ஷா திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு நிரந்தர தீர்வு உள்ளிட்ட கோரிக்கைகள்அடங்கிய மனுவினை வழங்கினார். இச்சந்திப்பின்போது, கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

## சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு – பள்ளிக் கல்வித் துறைக்கு நிறுத்தப்பட்ட நிதி விடுவிப்பு – தமிழ்நாடு மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - பிரதமரிடம் நேரில் வலியுறுத்தல்!

**புதுடெல்லி, செப். 28-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று புதுடெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைச் சந்தித்து கோரிக்கைகள் அடங்கிய மனுவினை அளித்தார்.**

**அதில், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு நிதி; பள்ளிக் கல்வித் துறைக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிதி விடுவிப்பு மற்றும் தமிழ்நாடு மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஆகிய மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி உள்ளார்.**

அதன் விபரம் வருமாறு :-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.9.2024) புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சந்தித்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்திட தேவையான ஒன்றிய அரசின் நிதி, சமக்ரசிக்ஷா திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு நிரந்தரத் தீர்வு ஆகிய மூன்று முக்கிய விஷயங்கள் குறித்த கோரிக்கை மனுவை வழங்கினார்.

**1. சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் II ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் 50:50 என்ற சமவீத மூலதனப் பங்களிப்பு அடிப்படையில் ஒப்புதல்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் தலா 50 சதவீத பங்கு மூலதனத்தைக் கொண்ட ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாகும். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் செயலாளர் இதன் தலைவர் ஆவார். 54.1 கி.மீ மொத்த நீளத்துடன் இரண்டு வழித்தடங்களுடன் கூடிய சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I ஐ ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் 50:50 என்ற சமவீத மூலதனப் பங்களிப்புடன் செயல்படுத்தியுள்ளது.

பொதுப் போக்குவரத்தினை உயர்த்திட வேண்டிய தேவையைக் கண்டறிந்து, தமிழ்நாடு அரசு சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்II ற்கு ஒப்புதல் அளித்து, 50:50 என்ற சமவீத மூலதனப் பங்களிப்புடன் ஒப்புதல் வழங்கவும், இருதரப்பு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெறுவதற்கும், ஒன்றிய அரசிற்கு பரிந்துரை செய்திருந்தது. ஒன்றிய அரசின் பங்களிப்பு வரப்பெறாத காரணத்தினால் பணிகளில் கடந்த ஆண்டு முதல் ஏற்பட்ட வேகக் குறைவு, நடப்பு நிதியாண்டிலும் பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் இந்த ஆண்டின் மொத்த திட்டச் செலவினம் ரூ.8000 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, பல்வேறு நிலைகளில் பணி நிறைவடையும் தேதிகள் ஒரு ஆண்டளவிற்கு தாமதமாகி, இறுதியாக கட்டிமுடிக்கும் தேதியை டிசம்பர் 2027லிருந்து டிசம்பர் 2028 ஆக தள்ளி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது, மிகுதியான காலம் மற்றும் செலவின அதிகரிப்பை ஏற்படுத்திவிடும்,

இந்தியாவிலுள்ள பெரும்பாலான மெட்ரோ இரயில் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு சமவீத மூலதனப் பங்களிப்பு அடிப்படையில் நிதி வழங்கியுள்ளதை இங்கு குறிப்பிடுவது முக்கியமாகக் கருதப்படுகிறது. ஆகையால் இந்தப் பொருள் குறித்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் II ற்கு ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் 50:50 என்ற சமவீத மூலதனப் பங்களிப்புடன், கட்டம்I ற்கு வழங்கப்பட்டது போன்றும், பொது முதலீட்டுக் குழு பரிந்துரைத்துள்ளவாறும் விரைவில் ஒப்புதல் வழங்குமாறு தனது கோரிக்கை மனு மூலமாக முதலமைச்சர் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

**2. தமிழ்நாட்டிற்கான சமக்ரசிக்ஷா திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கோருதல்**

தமிழ்நாட்டில் சமக்ரசிக்ஷா திட்டமானது 2018ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது பள்ளி முன்பருவக் கல்வி முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை கல்வி வழங்கும் வகையில் அமைந்துள்ளது. இத்திட்டம் பள்ளிக் கல்வித் துறையில் விரிவான முன்னெடுப்புகளை மேற்கொள்ளத் தக்க வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடானது, ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசின் திட்ட ஏற்பளிப்புக்குழுவால் ஏற்பளிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. ஏற்பளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடானது ஒன்றிய மற்றும் மாநில அரசால் 60:40 என்ற விகிதத்திலான பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் நிதி பங்களிப்புடன் பள்ளிக் கல்வித் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் சமக்ரசிக்ஷா திட்டம் மூலம் தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகளில் பயின்று வரும் 43,94,906 மாணவர்கள், 2,21,817 ஆசிரியர்கள் மற்றும் 32,701 அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்கான நிதி விடுவிக்கப்படவில்லையெனில் ஒன்றிய அரசானது மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வரும் மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டிற்கு வழங்கிடும் முக்கியத்துவத்தை குறைப்பதாகவே அமைந்திடும். எனவே, தமிழ்நாட்டின் நியாயமான இக்கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து தேசிய கல்விக் கொள்கை 2020ல் வரையறுக்கப்பட்டுள்ள மும்மொழிக் கோட்பாட்டினை வலியுறுத்துவதை மறுபரிசீலனை செய்யுமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் மும்மொழிக் கோட்பாடு சார்ந்து ஏற்கெனவே தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்பு ரீதியான பாதுகாப்பினை கருத்திற்கொண்டு, பி.எம்.ஸ்ரீ பள்ளிகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உட்பிரிவில் உரிய திருத்தம் மேற்கொள்ளப்படின், தமிழ்நாடு மாநிலமும் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ள ஏதுவாக அமையும் என முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தமிழ்நாட்டில் கல்வி பயிலும் 43,94,906 மாணவர்களின் எதிர்கால நலன்கருதி அவர்களின் கல்வி நலன் பாதிக்காத வகையில், பி.எம்.ஸ்ரீ பள்ளிகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வது சார்ந்த இறுதி முடிவுகள் எட்டப்படும் வரை காத்திராமல்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## புதுடெல்லியில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - சோனியா காந்தியுடன் சந்திப்பு!

*புதுடெல்லி, செப். 28-*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களை சந்தித்துப் பேசினார்.*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைச் சந்திக்க புது டெல்லி புறப்பட்டார். டெல்லி விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.*

*பின்னர் நேற்று காலை 10.45 மணியளவில் பிரதமரைச் சந்தித்து 45 நிமிடங்கள் உரையாடினார். அப்போது தமிழ்நாட்டின் முக்கியக் கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்து அவைகளை நிறைவேற்ற வலியுறுத்தினார்.*

*பின்னர், அண்ணா - கலைஞர் அறிவாலயம் சென்றார். அதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களை அவரது இல்லத்தில் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.9.2024) புதுடெல்லியில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களை சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் உடனிருந்தனர்.